## நூலக சேவை பெறுநர்களிற்கான பொதுவாக கவனிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள்.

- நூலகத்தில் அமைதியினை பேணுதல் வேண்டும்
- நூலக சேவை நேரத்தினை சரியான வகையில் பயன்படுத்தல்வேண்டும்
- தமது பொருட்களை, பொருட்கள் பேணுமிடத்தில் வைத்து உட்பிரவேசித்தல் வேண்டும்
- ஏனையோருக்கு இடையூறு ஏற்படுத்தாது தகவல்களை பெற்றுச் செல்லல் வேண்டும்
- நூல்கள், நூலக ஆவனங்கள், பத்திரிகை, சஞ்சிகை, தளபாடங்களை சேதப்படுத்தாது பாதுகாப்பாக பயன்படுத்தல் வேண்டும் ( வெட்டுதல், கிழித்தல், கீறுதல், உடைத்தல், ஈரப்படுத்தல், அழுக்காக்குதல்)
- நூலக வளாகத்தை அசுத்தப்படுத்தாது பாதுகாத்தல் வேண்டும்
- தகவல் சேவைகளை நூலகர், நூலக உதவியாளர்களிடம் உதவியை நாடியும் பெற்றுக் கொள்ள முடியும்

## நூலக அங்கத்தவராக சேர்பவர் கவனிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள்.

- நூலக அங்கத்துவம் பெறும் நபர் செட்டிகுளம் பிரதேச சபை எல்லைக்குள் வாசிப்பவர்/ மாணவர்/ ஊழியராக இருக்கும் ஒருவர் நூலக பிரமாணங்களிற்கும் விதிகளிற்கும் இணங்க நடப்பதற்கு சம்மதம் தெரிவித்து அங்கத்துவப் பணமாக ரூபா 100/= செலுத்துவதன் மூலமும் வருடாந்த புதுப்பித்தல் பணமாக ரூபா 50/= செலுத்துவதன் மூலமும் இரவல் பகுதியில் இருந்து புத்தகங்களை எடுத்து செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்
- அங்கத்துவம் பெற்ற ஒரு நபரது அங்கத்துவம் சேர்ந்த திகதியில் இருந்து ஒரு வருட காலத்துடன் முடிவடைந்துவிடும். முடிவடையும் திகதியில் புதுப்பித்தல் வேண்டம், அல்லது 3மாதங்களிற்குள் புதுப்பிக்க தவறும் அங்கத்தவரது அங்கத்துவம் ரத்து செய்யப்படும்.
- அங்கத்துவ அட்டைகள் தொலைக்கப்பட்டால் அது பற்றி உடனடியாக எழுத்து மூலமாக அறிவிக்கப்பட வேண்டும். மீளப்பெறுவதாயின் அட்டை ஒன்றுக்கு 10 ரூபா செலுத்துவதன் மூலம் புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- திருப்பி ஒப்படைக்க வேண்டிய திகதியில் அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைக்காத பத்தகம் ஒவ்வொன்றிற்கும் நாளொன்றிற்க்கு 3/= வீதம் தண்டப்பணம் அறவிடப்படும்.
- இரண்டு புத்தகங்களை பொற்று மீளளிப்பு திகதி குறிப்பிட்ட 10 நாட்களுக்குள் திருப்பிக் ஒப்படைத்தல் வேண்டும், தவறினாலோ அல்லது புத்தகங்களுக்கு சேதம் ஏற்படுத்தினாலோ செட்டிகுளம் பிரதேச சபை பொதுநூலகத்திற்கு புத்தகங்களின் முழுப் பெறுமதியையும் இதர செலவுகளையும் கொடுக்கப் பொறுப்பேற்கவேண்டும்.
- பொறுப்பு நிற்பவரின் அடையாள அட்டை போட்டோ பிரதி இணைத்தல் வேண்டும்.
- பெற்றோர் பொறுப்பு நிற்பவராக இருக்க முடியாது.
- கிராமசேவையாளர் / அதிபர் விண்ணப்பத்தாரரையும் பொறுப்பு நிற்பவரையும் எனக்கு தெரியும் எனவே நான் இவ் விண்ணப்பத்தை சிபார்சு செய்கிறேன் என்ற உறுதிப்படுத்தல் வேண்டும்.

## நூலக உசாத்துணைப்பகுதி பயனாளிகள் கவனிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள்.

- உசாத்துணைப்பகுதிக்கு சேவைபெறவருபவர்கள் நூல்களை சீரான வகையில் பயன்படுத்தல் வேண்டும்.
- பிரதிகளைப் பெற விரும்பின் பகுதி பொறுப்பாளரிடம் கோரி நூலகரது அனுமதியோடு பெற்றுக்கொள்ளல் வேண்டும்